

# St. Ludger

மார்ச் 26

# புனித லுட்ஜர் (744-809)

இவர் பிரீஸ்லாந்து நாட்டில் பிறந்தார். கிரகோரி என்னும் ஆயர் இவருக்குத் தனிப்பயிற்சி அளித்து இவரை இங்கிலாந்துக்கு அனுப்பினார். நாலரை ஆண்டுகளாக அங்கு கல்வி பயின்ற பின் தம் நாட்டிற்கு திரும்பி வந்து குருப்பட்டம் பெற்று வேதம் போதித்தார். பின்னர் புனித ஆசீர்வாதப்பர் சபையில் சேர்ந்து, சபையின் வார்த்தைப்பாடுகளை உச்சரிக்கவில்லை எனினும் சபையின் சட்டங்களை நுணுநுணுக்கமாக அனுசரித்தார். கார்லோஸ் அரசர் பிரீஸ்லாந்து நாட்டில் அவிசுவாசிகளை முறியடித்தார். உடனே இவர் தம் நாட்டுக்குத் திரும்பி அநேகரை மனந்திருப்பினார். விருப்பமின்றி ஆயர் பதவியை ஏற்றார். ஒவ்வொரு நாளும் பலமுறை வேதாகமத்தைப் பற்றி மறையுரைகள் நிகழ்த்துவார். இவர் கடும் தவ முயற்சிகள் செய்வார். எனினும் வெளிக்கு சாதாரணமாகவே காணப்பட்டார். ஆங்காரிகளின் முன் இவர் அசையாத பாறை போல் இருப்பார். ஏழைகளிடம் மிக அன்பு காட்டினார். யாவரும் எப்பொழுதும் இவருடம் பேசலாம். தமக்கு அத்தியாவசியமானவைகளை வைத்துக் கொண்டு மீதியை ஏழைகளுக்குக் கொடுப்பார். வாழ்வின் கடைசி நாள் வரை உழைத்தார்.

**சிந்தனை:**

நமக்கு தேவையில்லாததை ஏழைகளுடன் பகிர்ந்து கொள்வது நல்லது.

**செபம்:**

இயேசுவே, எங்களுக்கு தாழ்ச்சியையும் சாந்த குணத்தையும் தாரும்.